


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜுன். 28, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 259 ❖ ரூ.10

ஜீலை 11-ம் தேதி மீண்டும் அதிமுக பொதுக்குழு கூட்டம்

# சாடல்

## துரோகத்தின் அடையாளமாக ஓ.பன்னீர் செல்வம் இருக்கிறார். ஆரம்ப காலத்திலிருந்து அ.தி.மு.கவிற்கு துரோகம் செய்துள்ளார் : ஜெயக்குமார்





சென்னை, ஜுன்.28-

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் விஸ்வரூபம் எடுத்த நிலையில், தினந்தோறும் பரபரப்பு காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

டெல்லி சென்றிருந்த ஓ.பன்னீர் செல்வம் அவரது சொந்த மாவட்டமான தேனிக்கு சென்றார். அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தகைய பரபரப்பான சூழலில் அ.தி.மு.க சார்பில் தலைமைக் கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

திட்டமிட்டபடி நேற்று அ.தி.மு.க தலைமைக் கழகத்தில் தலைமைக் கழகநிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி, ஜெயக்குமார், தமிழ் மகன் உசேன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். அந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேசினார். அப்போது அவர், 'ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப்பாளர்கள் பதவிகள் காலாவதியாகிவிட்ட நிலையில் கழகத்தின் சட்டதிட்ட விதிகளில் இடம்இருக்கும் நிலையில் கழக அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன் தலைமையில் தலைமைக் கழகநிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

74 தலைமைக்கழக நிர்வாகிகள் உள்ள நிலையில் 65 தலைமைக் கழக நிர்வாகிகள் வருகை தந்துள்ளனர். 4 பேர் கூட்டத்துக்கு வர முடியவில்லை என்று விளக்கமளித்துள்ளனர். பன்ரூட்டி ராமச்சந்திரன் உடல்நிலை சரியில்லை என்று கடிதம் மூலம் விளக்கம் அளித்துள்ளார். திண்டுக்கல் சீனிவாசன் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று விளக்கம் அளித்துள்ளார். 5 தலைமைக் கழக நிர்வாகிகள் மட்டுமே ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தில் 11-ம் தேதி நடைபெறும் பொதுக்குழு கூட்டத்துக்கான அழைப்பிதழ் தபால் மூலம் அனுப்பவது குறித்து முடிவு செய்யப்பட்டது. மேலும் நிறைய விவகாரங்கள் குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. அதெல்லாம் மிகவும் ரகசியமானது. இன்று எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அறிவிப்புகளாக வரலாமா கூடாதா என்று கட்சிதான் முடிவு செய்யும்.

பிரிவு 20 ஆ7 ஒருங்கிணைப்பாளர் இல்லாத சூழலில் கட்சியை வழிநடத்த தலைமைக் கழக நிர்வாகிகள் அதிகாரம் பெற்றவர்கள். தலைமைக் கழக செயலாளராக எடப்பாடி பழனிசாமி இருக்கும் நிலையில் நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதுகுறித்து அறிந்தும் அறியாமல் ஓ.பன்னீர் செல்வம் இருக்கிறாரா என்று தெரியவில்லை. தி.மு.கவின் விமர்சனம் சாத்தான் வேதம் ஓதுவதுபோல உள்ளது. காவிரி நீர், கச்சத் தீவு, முல்லைப் பெரியாறு, முள்ளிவாய்க்கால் படுகொலை என தொடர்ந்து தி.மு.க துரோகம் செய்தது.

கிழிக்கப்பட்ட ஓ.பன்னீர் செல்வத்தின் பேனரை மாற்றுவதற்கு உண்டான நடவடிக்கை நடைபெறுகிறது. துரோகத்தின் அடையாளமாக ஓ.பன்னீர் செல்வம் இருக்கிறார். ஆரம்ப காலத்திலிருந்து அ.தி.மு.கவிற்கு துரோகம் செய்துள்ளார். துரோகம் என்பது ஓ.பன்னீர் செல்வத்தின் உடன் பிறந்த ஒன்று. ஜுலை 11-ம் தேதி முக்கிய முடிவுகள் எடுக்கப்படும். மு.க.ஸ்டாலினை ஓ.பி.ரவீந்திரநாத் சந்தித்தை அ.தி.மு.க தொண்டன் ஏற்றுக் கொள்ள மாட்டான். பொருளாளர் பதவியில் ஓ.பன்னீர் செல்வம் நீடிப்பாரா என்பது குறித்து பொதுக்குழு முடிவு எடுக்கும்' என்று தெரிவித்தார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தலைமை செயலகத்தில், ஆன்லைன் ரம்மி விளையாட்டை தடை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை, குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு வழங்கினார். உடன் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, சட்டத்துறை செயலாளர் கார்த்திகேயன், குழுவின் உறுப்பினர்கள் ஸ்நேஹா அமைப்பின் நிறுவனரும் உளவியலாளருமான லட்சுமி விஜயகுமார், காவல் துறை கூடுதல் இயக்குனர் வினித் தேவ் வான்கடே, ஆகியோர் உள்ளனர்.

## பேறிவாளன் மன வருத்தத்துடன் உள்ளார் அற்புதம்மாள்



வேலூர் , ஜுன்.28-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏழு பேர் சுமார் 30 ஆண்டுகளாக சிறையில் இருந்துவந்தனர். அதில், கடந்த மாதத்தில் பேரறிவாளன்மட்டும்உச்ச நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார். மீதமுள்ள ஆறு பேரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைஎடுக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்தது.

இந்நிலையில், பேரறிவாளனின் தாயாரும் அவருடைய விடுதலைக்கு நீண்ட காலம் போராட்டம் நடத்தியவருமான அற்புதம்மாள் சென்னை புழல் சிறைக்குச் சென்று ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் உள்ளிட்டவர்களைச் சந்தித்து பேசினார். குறிப்பாக உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெரும் ராபரட் பயஸ் அவர்களை சந்தித்து நலம் விசாரித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவர், 'ராபர்ட் பயாஸின் உடல்நிலையை கருத்தில் கொண்டு முதல்வர் உடனே பரோல் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வழக்கிலிருந்து மற்றவர்கள் விடுதலையாகததால் பேரறிவாளன் மன வருத்தத்துடன் உள்ளார். பேரறிவாளனுக்கு பெண் பார்க்கும் படலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பேரறிவாளனுக்கு கிடைத்த தீர்ப்பால் அனைவருக்கும் விரைவில் நன்மை நடக்கும். முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் எனநம்புகிறோம்.31ஆண்டு சிறைவாசம் அனுபவித்து பாதிக்கப்பட்டுள்ளோம்' என்று தெரிவித்தார்.

## ஆலங்குடி அரசு ஆண்கள் பள்ளியில் 6-வகுப்பு தமிழ் வழியில் சேரும் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கல்



ஆலங்குடி, ஜுன்.28-

ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்வழிக்கல்வியை ஊக்குவிக்கும்வகையில்6ம் வகுப்பில்தமிழ்வழிக்கல்வியில்சேரும்மாணவர்களுக்கு இலவச சீருடைகளை பள்ளித்தலைமை ஆசிரியர் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இந்த ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

அரசுப்பள்ளிகளிலும் ஆங்கிலவழிக்கல்விக்கான ஆர்வம் அதிகரித்து வரும் நிலையில், தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஆறாம்வகுப்பில் தமிழ்வழிக் கல்வியில் சேரும் மாணவர்களுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ரெத்தினகுமார் இலவசமாக பள்ளி சீருடைகளையும் 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் இலவசமாக சீருடை மற்றும் பிறஉதவிகள் வழங்கி வருகிறார்.

இப்பள்ளியில் நடப்பு ஆண்டிற்கான 10 வகுப்பு படித்தமாணவர்கள் முதல் மதிப்பெண் போஜராஜன் 475, மருதமுத்து 469, லட்சுமணன் 443, அப்துல் அஜீஸ் 443 என 500க்கு 84 % மதிப்பெண்கள்பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர். நேற்று வெளிவந்த +1 தேர்வில் மேகநாதன் 507, அதிபன் 489, அகத்தியன் 447 என 600க்கு முதல் மூன்று இடத்தை பெற்றுள்ளனர். +2தேர்வில் பாலகிருஷ்ணன் 511, பிரியதர்ஷன்505,அகத்தியன் 489 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

அரசு பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி சதவீதமும் அதிகளவுபெற்றிருப்பதால் இப்பள்ளியில் தமிழ்வழியில் படிப்பதற்கு தங்களது மாணவர்களை பெற்றோர்கள் ஆர்வத்துடன் சேர்த்து வருவதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.



புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில், ஐந்து மாற்றுத்திறனாளிகளுக்கு கற்றல் மற்றும் பேச்சு பயிற்சி வழங்கிட விலையில்லா ஆவாஸ் செயலியுடன் கூடிய கையடக்க கணினிகளை, கலெக்டர் கவிதா ராமு வழங்கினார். உடல் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் உள்ளார்.

## மகாராஷ்டிரா அரசியல் - அதிருப்தி எம்எல்ஏக்கள் பதில் அளிக்க கால அவகாசம் வழங்கிய உச்ச நீதிமன்றம்

மகாராஷ்டிரா , ஜுன்.28-

மகாராஷ்டிராவில் ஆளும் சிவசேனா கட்சிக்கு எதிராக ஏக்நாத் ஷிண்டே தலைமையில் அதிருப்தி எம்.எல்.ஏகள் 38 பேர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். போர்க்கொடி தூக்கிய எம்எல்ஏக்களில் 16 பேரை தகுதி நீக்கம் செய்ய அம்மாநில துணை சபாநாயகர் நடவடிக்கை எடுக்க தொடங்கினார். துணை சபாநாயகரின் தகுதி நீக்க நோட்டீசுக்கு எதிராக ஏக்நாத் ஷிண்டே தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு நீதிபதிகள் சூர்ய காந்த் மற்றும் பர்திவாலா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரித்தது. ஏக்நாத் ஷிண்டேவுக்கு ஆதரவாக மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே வீடியோ கான்ஃப்ரன்சிங் வாயிலாக ஆஜராகி வாதாடினார். இந்த வழக்கு விசாரணையில் 38 எம்எல்ஏக்கள் தரப்பு தாங்கள் அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றதாகக் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மனுதாரர்களின் வாதத்தை விசாரித்த நீதிபதிகள் துணை சபாநாயகரின் தகுதி நீக்கம் நோட்டீஸ் தொடர்பாக 16 அதிருப்பதி எம்எல்ஏக்கள் பதில் அளிக்க ஜுலை 11ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது. அதுவரை தகுதி நீக்க நடவடிக்கையை நிறுத்தி வைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், அதிருப்தி எம்எல்ஏக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து வழக்கு விசாரணையை ஜுலை 11 ஆம் தேதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

மகாராஷ்டிராவில் சிவசேனா-தேசியவாத காங்கிரஸ்-காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் மகாவிகாஸ் அகாதி கூட்டணி ஆட்சி நடைபெற்றுவருகிறது. சிவசேனா கட்சியின் தலைவர் உத்தவ் தாக்ரே முதலமைச்சராக உள்ளார். இந்நிலையில், இந்த கூட்டணி முறையற்ற ஒன்று எனக் கூறி ஏக்நாத் ஷிண்டே தலைமையில் இந்த 38 எம்எல்ஏக்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கல்வி மாவட்டத்தில் இயங்கி வரும் ஆவணத்தான்கோட்டை மேற்கு நடுநிலைப் பள்ளியில் மழலையர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை 248 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இம் மாணவர்களுக்கான பள்ளி நாட்குறிப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமையாசிரியர் ப.கலைச்செல்வி தலைமை தாங்கினார். மாணவர்களுக்கான பள்ளி நாட்குறிப்பை அனைத்து மாணவர்களுக்கும் ராஜேந்திரன், தனலட்சுமி தம்பதியினர் புதல்வன் ஜீவா சுபாஷினி தம்பதியினரும் வழங்கி மாணவர்களை வாழ்த்தினர். மாணவர்கள் அனைவரும் மன மகிழ்ச்சியோடு நாட்குறிப்பை பெற்றுக்கொண்டனர். நேற்று முதலே பள்ளி நாட்குறிப்பு எழுதும் செயல்பாடும் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் பள்ளியின் இடைநிலை ஆசிரியர் சுமதி நன்றியுரை கூறினார்.

## ஆலங்குடி அருகே வரதட்னை கொடுமை பெண்சிறையிலடைப்பு



ஆலங்குடி, ஜுன்.28-

ஆலங்குடி அருகே மாங்கோட்டையைச் சேர்ந்த எம் தெற்கு தெரு பிரவீன்குமார் மனைவி வினோசியா (வயது 22), இவருக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு காதல் திருமணம் நடைபெற்று. 1 1/2 வயது மகன் உள்ளார்.

இவரது மாமியார் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக கடந்த 17ஆம் தேதி மழையூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் புகாரை பெற்றுக்கொண்ட போலீசார் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்.

மகளிர் போலீசார் மாமியார் காந்திமதியை தேடி வந்தனர் இதற்கிடையே வினோசியா வீட்டில் உள்ள மண்ணெண்ணையை தலையில் ஊற்றிக்கொண்டு தீ வைத்து படுகாயத்துடன் அலறியதையடுத்து. அருகிலிருந்தவர்கள் அவரை மீட்டு ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்தனர் அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

மருமகளை கொடுமைபடுத்தியதாக சீனிவாசன் மனைவி காந்திமதியை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மகாலெட்சுமி கைது செய்து ஆலங்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி விஜய்பாரதி முன்பு ஆஜர்படுத்தி திருச்சி பெண்கள் சிறையில் அடைத்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்











| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,745 | Rs.5,144 |

## வரலாற்றில் இன்று

1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# திண்டுக்கல்லில் உலக போதைப்பொருள் தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பிரச்சாரம்

திண்டுக்கல் ஜூன்.28-

திண்டுக்கல்லில்,உலக போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்ட போதைபொருள் நுண்ணறிவு பிரிவு சார்பில், விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. இதில் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் புகழேந்தி, ஆய்வாளர் அனிதா, சார்பு ஆய்வாளர் துரைபாண்டி,தலைமை காவலர் இளவரசன் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் ,பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் பேசுகையில், போதைப்பழக்கம் எந்த உருவத்தில் இருந்தாலும் அதனை வேரோடு ஒழிப்பதற்கு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் ஒத்துழைக்க வேண்டும். மது அருந்துதல், புகை பிடித்தல், புகையிலை பொருட்களை பயன்படுத்துதல் போன்றவற்றால் மன நலமும் உடல் நலமும் கெடும். கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பது குற்றம் ஆகும் .


மேலும் பெற்றோர்களும், பொதுமக்களும் விழிப்போடு இருந்து இளைய தலைமுறையை போதை பழக்க வழக்கங்களில் இருந்து மீட்டெடுக்க உறுதி ஏற்க வேண்டும். இவ்வாறு பேசினார். முன்னதாக, போதைப் பொருளை பயன்படுத்த மாட்டோம், போதைப் பழக்க வழக்கங்களில் இருந்து இளைய சமுதாயத்தை காப்போம் என்பன போன்ற பதாகைகளை ஏந்தியும், துண்டு பிரசுரங்களை வழங்கியும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு பலூன்களை வானில் பறக்கவிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். நிறைவாக, மனித நேய மக்கள் அறக்கட்டளை தலைவர் செல்வம் நன்றி கூறினார்.

# +2-வில் தொழிற்கல்வி படித்தாலும் இனி இன்ஜினியரிங் சேரலாம் என அமைச்சர் பொன்முடி அறிவிப்பு

சென்னை ஜூன்.28-

அண்ணா பல்கலைக்கழகம் உட்பட அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், பன்னிரெண்டாம் வகுப்பில் தொழிற் கல்வி முடித்த மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் பொன்முடி, ஐடிஐ முடித்த மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தற்போது தொழிற் கல்வியை முடித்த சுமார் 2000 மாணவர்கள், மெக்கானிக்கல் இன்ஜினியரிங், சிவில் இன்ஜினியரிங், உள்ளிட்ட 6 பிரிவுகளில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

அண்ணா பல்கலைக்கழகம் உட்பட அதன் உறுப்புக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் தொழில் கல்வி முடித்த மாணவர்களுக்கு 2 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளது. உயர்கல்வி சேரும் மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை தமிழக முதலமைச்சர் ஜூலை மாதம் 15ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளார். தொடர்ந்து ஜூலை 18-ஆம் தேதி முதல் பொறியியல் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடங்கப்படும். பொறியியல் கல்லூரிகளில் சேர 85,000 பேர் இதுவரை விண்ணப்பித்து உள்ளனர். அப்படி பொறியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் இந்தாண்டு சீட் கிடைக்கும்" என்றும் தெரிவித்தார்.

# அரிமளம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி

அரிமளம் ஜூன்.28-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2022-2023 மாநிலத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சிக்கான பயணத்தினை துணை திட்ட இயக்குநர்-அட்மா / வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) பெரியசாமி துவக்கி வைத்தார். மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் 40 விவசாயிகள் 3 நாள் பயிற்சியாக உதகமண்டலம் , இந்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வட்டார தொழில்நுட்ப குழு அமைப்பாளர் /வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ரெங்கசாமி ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றார்.



இந்திய மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி மணிவண்ணன் , மண் மற்றும் நீர் வளத்தின் முக்கியத்துவம் பற்றியும், பல்வேறு பயிர்களுக்கான நீர் பாசன தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கமளித்தார். கண்ணன் உழவியல் துறை, பயிர் சாகுபடியில் மண் போர்வையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். சுந்தராம்பாள் வேளாண் விரிவாக்கம் இந்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். சங்கிலி தொழில்நுட்ப உதவியாளர், இரப்பர் தடுப்பணை அமைத்தல் பற்றி எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் அரிமளம், புதுக்கோட்டை, திருமயம் பொன்னமராவதி , அன்னவாசல், விராலிமலை, மற்றும் குன்றாண்டார் கோவில் வட்டாரங்களிலிருந்து 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அரிமளம் வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் சி.டயானா ஜெனிபர், மு.சுவேதா, பு.ஆனஸ்ட் ராஜ், த.பிரதீபா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் த.லெட்சுமிபிரபா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செ.சங்கீதா மற்றும் வி.முருகன் ஆகியோர் செய்திருந்தனர்.






# திருவள்ளூர் அருகே தனியார் பள்ளி விடுதியில் தங்கி படித்த பிளஸ்-2 மாணவி மர்மமான முறையில் சாவு

திருவள்ளூர் ஜூன்.28-

திருவள்ளூர் அருகே தனியார் பள்ளி விடுதியில் தங்கி படித்த பிளஸ்-2 மாணவியின் மர்ம சாவு குறித்து போலீசார் விசாரணை செய்து வருகிறனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த தச்சூர் அருகே தனியார் பள்ளி ஒன்று உள்ளது. இந்த பள்ளியின் விடுதியில் திருவாரூர் மாவட்டம், வேளாண்குடி கிராமத்தை சேர்ந்த ராஜா என்பவரின் மகள் ஹரிணிகா(16) தங்கி பிளஸ்-2 படித்து வந்தார்.

இந்த நிலையில் மாணவி ஹரிணிகாவிற்கு வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து மாணவிக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து கும்மிடிப்பூண்டி இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணிதலைமையில் கவரைப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவியின் மரணத்திற்கான காரணம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருநெல்வேலியில் ஆட்டோ கவிழ்ந்த விபத்தில் எல்கேஜி மாணவன் பலி

**திருநெல்வேலி ஜூன்.28-**

**திருநெல் வேலியில் ஆட்டோ கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் 5 வயது சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான்.**

**திருநெல்வேலி மாவட்டம் வெட்டியபந்தி பகுதியிலிருந்து கேடிசி நகர் அருகில் உள்ள தனியார் பள்ளிக்கு ஆறு மாணவ மாணவிகளை ஏற்றிக்கொண்டு ஆட்டோ நேற்று காலை புறப்பட்டு சென்றுள்ளது. வசவப்பபுரம் - செய்துங்கநல்லூர் சாலையில் வந்தபோது ஆட்டோ எதிர்பாராமல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.**



**இதில் ஆட்டோவிற்கு அடியில் சிக்கிய 5 வயது செல்வ நவீன் என்ற மாணவன் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் 5 குழந்தைகள் காயங்களுடன் அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிறுவன் செல்வ நவீன் கேடிசி நகரில் உள்ள தனியார் பள்ளியில் எல்கேஜி படித்து வந்துள்ளார்.**



**மதுரை மாவட்டம் 31-வது வார்டு பகுதியில் மதுரை மாநகராட்சி சார்பாக மரம் நடும் விழா நடைபெற்றது. இவ்விழாவினை 31-வது வார்டு மாமன்ற உறுப்பினர் தல்லாகுளம் முருகன் மற்றும் பொறியாளர் பொன்மணி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் மண்டலத் தலைவர் புவனேஸ்வரி தலைமை தாங்கினார். துணை ஆணையாளர் தர்மலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மரங்களை நட்டார். மேலும் மாநகராட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.**

## குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில்

# பொது வேட்பாளராக போட்டியிடும் யஷ்வந்த் சின்ஹா வேட்புமனு தாக்கல்

டெல்லி ஜூன்.28-

குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளராக போட்டியிடும் யஷ்வந்த் சின்ஹா, தனது வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார். அவர் வேட்புமனு தாக்கல் செய்கையில், காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, சரத்பவார், அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



குடியரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெற உள்ளது. அதன் முடிவுகள் 21-ஆம் தேதி அறிவிக்கப்பட உள்ளன. இந்தத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பில் மூத்த அரசியல்வாதி யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிடுகின்றனர். திரௌபதி முர்மு கடந்த வெள்ளிக்கிழமை தனது வேட்புமனுவை தாக்கல் செய்துள்ள நிலையில் யஷ்வந்த் சின்ஹா நேற்று தனது வேட்புமனுவை கூட்டணிக் கட்சி தலைவர்களுடன் சென்று மாநிலங்களவை செயலாளரிடம் தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் மூத்த தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை குழு தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஜெய்ராம் ரமேஷ், தி.மு.க. சார்பில் மாநிலங்களவை தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆ.ராசா, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், இடதுசாரி கட்சிகள் சார்பில் டி.ராஜா மற்றும் சீதாராம் யெச்சூரி, டி.ஆர்.எஸ். தரப்பில் அக்கட்சியின் செயல் தலைவர் கே.டி.ராமாராவ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தரப்பில் அபிஷேக் பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவார், ஜம்மு-காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சி தலைவர் பரூக் அப்துல்லா, சிவசேனா, வி.சி.க. உள்ளிட்ட எதிர்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து யஷ்வந்த் சின்ஹா நாடாளுமன்ற வளாகத்தில் மகாத்மா காந்தி, அம்பேத்கர் ஆகியோரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். எதிர்க்கட்சிகள் சார்பில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் யஷ்வந்த் சின்ஹாவுக்கு காங்கிரஸ், தி.மு.க., இடதுசாரிகள், சிவசேனா உள்ளிட்ட 12 முக்கிய கட்சிகளின் தலைவர்கள் தங்களது ஆதரவை வழங்கி இருக்கிறார்கள். அடுத்த சில நாட்களில் யஷ்வந்த் சின்ஹா தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு சென்று அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்து குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான ஆதரவை கோர இருக்கிறார்.

# அகில இந்திய வரி ஆலோசகர் கூட்டமைப்பு மற்றும் தஞ்சை வரி ஆலோசகர்கள் கூட்டமைப்பு சார்பில் முப்பெரும் விழா

தஞ்சை ஜூன்.28-

தெற்கு மண்டல அகில இந்திய வரி ஆலோசகர் கூட்டமைப்பு மற்றும் தஞ்சை வரி ஆலோசகர்கள் கூட்டமைப்பு சார்பில் 75வது சுதந்திர தின விழா, தஞ்சை கூட்டமைப்பின் இருபத்தி ஐந்தாம் ஆண்டு விழா மற்றும் ஆலோசனைக் கூட்டம் ஆகிய முப்பெரும் விழா தஞ்சையில் இரண்டு நாட்கள் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு தெற்கு மண்டல தலைவர் அமரேந்தர் தலைமை தாங்கினார். சத்தியநாராயணா பாஸ்கர் முன்னாள் தலைவர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



தஞ்சை ஆனந்தன் வரவேற்றார். தஞ்சை அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் புதுச்சேரி, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட 6 மாநிலங்களில் இருந்தும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் பள்ளி மாணவமாணவிகள் 12பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. விழா ஒருங்கிணைப்பாளர் ஆடிட்டர் ரவிச்சந்திரன் நிறைவுரையாற்றினார். இக்கூட்டத்தில் 2021-22 ஆம் ஆண்டு வருமான வரி படிவம் ஆன்லைன் தாக்கல் செய்வதை ஜூன் 20-ஆம் தேதி முதல் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே கடைசி நாளான ஜூலை 31ம் தேதியை டிசம்பர் 31ம் தேதிக்கு நீட்டிக்க வேண்டும். ஆன்லைன் மூலம் வருமான வரி படிவம் தாக்கல் பதிவு செய்வதில் உள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 75வது சுதந்திர தின விழாவை கொண்டாடும் வகையில் தஞ்சை பெரிய கோயிலுக்கு வெளியே கேக் வெட்டிபொதுமக்களுக்குஇனிப்பு வழங்கப்பட்டது. பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்கும் வகையில் மஞ்சப்பை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முடிவில் கிருஷ்ணமோகன் நன்றி தெரிவித்தார்.



**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சித்துறையால் நடத்தப்பெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000, இரண்டாம் பரிசு ரூ.3000, மூன்றாம் பரிசு ரூ.2000, அரசுப் பள்ளி மாணர்வளுக்கான சிறப்புப் பரிசு இரண்டு மாணவர்களுக்கு தலா ரூ.2000 பரிசுத்தொகைகளும் பாராட்டுச் சான்றிதழ்களையும் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000, இரண்டாம் பரிசு ரூ.3000, மூன்றாம் பரிசு ரூ.2000 பரிசுத்தொகைகளும் பாராட்டுச் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா வழங்கியபோது எடுத்தப்படம்.**

# ஏனங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் இடைத்தேர்தல் கடைசி நாள் 6 பேர் வேட்பு மனு தாக்கல்



நாகை, ஜுன்.28–

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் ஏனங்குடி ஊராட்சிமன்ற தலைவர் பதவிக்கான இடத்தைநிரப்புவதற்கான இடைத்தேர்தல் கால அட்டவணை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 20-ம் தேதி முதல் நேற்று 27-ந்தேதி வரை தினந்தோறும் காலை 10 மணி முதல் மாலை 5 வரை வேட்பு மனு தாக்கல் நடைபெற்றது.

கடைசி நாளான நேற்று திமுக சார்பில் ஹாஜா நிஜாமுதீன், ரெஜிஸா பானு என 2 பேரும்,அதிமுக சார்பில் மோகன், கார்த்திக்கேயன் என 2 பேரும்,விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அஜித் என ஒருவரும், மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் பக்ருதீன் அலி அஹமது என 6 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பு மனு பரிசீலனை இன்று நடைபெறும், நாளை பிற்பகல் 3 மணி வரை வேட்பு மனுக்களை திரும்ப பெற்றுக்கொள்ளலாம். தேர்தல் வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9-ம் தேதியும், வாக்கு எண்ணிக்கை12-ம்தேதியும் நடக்கிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டதால் மாதிரி நடத்தை விதிகள், தேர்தல் நடைமுறைகள் அமலில் இருக்கும்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ திருவண்ணாமலையில் முக்தி தரும் தலமாக அருணாச்சலேஸ்வரர் கோயில் விளங்குகிறது. இக்கோவிலுக்கு உள்ளூர் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வார்கள். இந்நிலையில் நேற்று மாலை கோவிலில் பிரதோஷ வழிபாடுகள் நடந்தது. அப்போது கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கோவிலுக்கு வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.மேலும் கோவிலில் உள்ள பெரிய நந்திக்கு பால்,சந்தனம், மஞ்சள் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

## 11-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

# திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை



புதுக்கோட்டை ஜூன்.28–

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நேற்று வெளிவந்த 11ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 600க்கு 586 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்துள்ளனர்.

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்கள் வழக்கம் போல் நூறு சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளார்கள். மாணவர்கள் 55, மாணவிகள் 23 என தேர்வு எழுதிய 78 மொத்த பேரும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

கா.ஆயிஷா ஷிபானா (586), ஆர்.எம்.ஆவிச்சி விஸ்வநாதன் (585), பொ.முத்துவடிவேல்(565), ச. அருணன்(563), ம. அவினாஸ் (549), நா.வெங்கடேஸ்வரன்(546), வெ.கோமதி(543), க.ஸ்வேதா(534), பா.சுபஸ்ரீ (520) ஆகியோர் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

ஆயிஷா ஷிபானா, கணினிப் பயன்பாடு, கணக்குப் பதிவியல், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளார். ஆவிச்சி விஸ்வநாதன் பொருளியல் மற்றும் வணிக கணிதம் ஆகிய இரண்டு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளியின் முதல்வர் தங்கம் மூர்த்தி, பள்ளியின் ஆலோசகர் அஞ்சலிதேவி தங்கம்மூர்த்தி, நிர்வாக இயக்குநர் நிவேதிதா மூர்த்தி, துணை முதல்வர் குமாரவேல், ஆசிரியர்கள், அபிராமசுந்தரி, கமல்ராஜ், சுதா, கோகிலா, ராஜாமணி, ஜெயசுதா, அழகன், பிரகாஷ், சின்னையா, சத்தியராஜ், ஆறுமுகம், கார்த்திகா மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, பவானி ஆகியோர் பாராட்டி இனிப்புகள் வழங்கினர்.

# மயிலாடுதுறையில் நடைபெற்ற இலவச கண் பரிசோதனை முகாம்



மயிலாடுதுறை, ஜூன்.28–

நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்க நிதி உதவியுடன் இலவச கண் மருத்துவ முகாம் மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள ஜெயின் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

மயிலாடுதுறை நியூசெஞ்சுரி லையன்ஸ் சங்கம் மற்றும் சீமாட்டி சில்க்ஸ், பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இந்த முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் கண்களை பரிசோதனை செய்து கொண்டனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு கண்களில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த கண் மருத்துவ முகாமில் 443 பயனாளிகள் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர். மேலும் 153 பொதுமக்களுக்கு மேல் சிகிச்சை எடுக்கும் படி உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது. பத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இந்த முகாமில் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

# அக்னிபத் திட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெறக்கோரி மயிலாடுதுறையில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை, ஜூன்.28–

இந்திய ராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் அக்னிபத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 4 ஆண்டிகளுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் இளைஞர்கள் சேர்க்கப்படும் இத்திட்டத்துக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

எனவே இதனை திரும்ப பெறக்கோரி மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி எதிரில் காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மயிலாடுதுறை எம்எல்ஏ ராஜகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தில் பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். பின்னர் அக்னிபத்திட்டத்தால் இளைஞர்களின் எதிர்காலம் வீனாகும் என்றும், நான்கு வருடராணுவபயிற்சிக்கு பின், ஆயுத பயிற்சி பெற்றவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் நெருக்கடியை சந்திக்கும் சூழல் ஏற்படுமஎன்றும் கூறி காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பலர் கண்டன உரையாற்றினர். மத்திய அரசு அக்னி பத்திட்டத்தை கைவிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 100க்கு மேற்பட்டோர் முழக்கமிட்டனர் .

# குத்தாலம் அருகே மூவலூர் ஸ்ரீ கற்பக விநாயகர் மற்றும் ஸ்ரீ மன்மதீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்



குத்தாலம், ஜூன்.28:–

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் காவல் சரகத்திற்கு உட்பட்ட மூவலூர் கிராமத்தில் ஸ்ரீகற்பக விநாயகர் மற்றும் ஸ்ரீ மன்மதீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் அனுக்ஞை பூஜை, கோபூஜை, விக்னேஸ்வர பூஜை, கணபதிஹோமம், நவக்கிரக ஹோமங்களுடன் தொடங்கப்பட்டு நேற்று காலை இரண்டாம் கால யாக சாலைகள் முடிவடைந்து பூர்ணாஹூதி மற்றும் மஹா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு செய்யப்பட்டு கோவிலை வலம் வந்தடைந்தது.

தொடர்ந்து காலை 9 மணிக்கு மேல் 10.15-க்குள் ரோகினி நட்சத்திரம், சித்தயோகம், சிம்ம லக்னத்தில் விமானக் கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து விநாயகர் மற்றும் மன்மதீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இவ்விழா ஏற்பாடுகளை அறங்காவலர் மூவலூர் வடமலை குடும்பத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# தாமரைப்பாக்கம் அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் : 4 வயது சிறுமி உதவி



திருவள்ளூர், ஜூன்.28–

திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம் அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர்கள் ஜோதி சரண்யா தம்பதியினர் 4 வயது மகள் சிறுமி இவாஞ்சலின் பள்ளியில் படிப்பதற்காக சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் அங்குள்ள அரசு ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு படிப்பதற்கு தேவையான கல்வி உபகரணங்கள் நோட்டுப் புத்தகம் வகுப்பறைக்குதேவையான கரும்பலகை ஆகியவற்றை குடும்பத்தினர் சார்பில் பெற்றோருடன் சிறுமி இவாஞ்சலின் வழங்கினார்.

மேலும் சமையல் வேலை செய்யும் ஊழியர்களுக்கு புடவை மற்றும் கிராம மக்களுக்கு அனைவருக்கும் சேலை இனிப்புகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர் சிறுமியின் செயலைப் பாராட்டி பள்ளியின் சார்பில் மாணவியின் பெற்றோருக்கு ஆசிரியர்கள் சால்வை அணிவித்து மரியாதை செய்து தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்



▶ தென்காசி மாவட்டம், காசி விஸ்வநாதர் கோவில் முன்பாக போதைப்பொருள் பயன்படுத்துதல், கடத்தலுக்கு எதிரான சர்வதேச தின பேரணிகள், கருத்தரங்குகள், மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது. தென்காசி மாவட்ட போதைப்பொருள் பயன்படுத்துதல் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியில் தென்காசி செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். மாலைப்பொழுது தொடங்கி மெயின் ரோடு வழியாக வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைவு பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேரணியை தென்காசி காவல் உதவி ஆணையர் ராஜ மனோகரன் தொடங்கி வைத்தார். மேலும் கே.சுப்பையா மதுவிலக்கு டிஎஸ்பி சங்கரன்கோவில், சாய் சக்தி மது போதை சிகிச்சை மையம் தென்காசி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருவள்ளூர் ஸ்பார்ட்டன்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் வழக்கறிஞர் கரண்ட் கார்த்திக்கு குவிந்த விருதுகள்



திருவள்ளூர், ஜுன்.28–

உலக பொதுசேவை அமைப்பான ரோட்டரி அமைப்பில் மாவட்டம் 3231 இல் 2 வருடங்களுக்கு முன்பு இணைத்துக்கொண்டது திருவள்ளூர் ஸ்பார்ட்டன்ஸ் ரோட்டரி சங்கம் தன்னை இணைத்துக்கொண்ட இரண்டாவது வருடத்திலேயே 18க்கும் மேற்பட்ட விருதுகளை வாங்கி அசத்தியுள்ளது

கடந்த வருடம் அனுகிரஹா தலைமையிலான குழு இதேபோல விருதுகளை குவித்த நிலையில் இந்த ஆண்டு 2021/2022 காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாபெரும் மாவட்ட விருதுகள் வழங்கும் விழாவில் ஆளுநர் நிர்மல் ராகவன் தலைமையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ரோட்டரியின் உலகத் தலைவர் ஷேகர் மேத்தா பங்கு பெற்று விருதுகளை வழங்கினார் இந்த விருது வழங்கும் விழாவில் சிறந்த தலைவர், சிறந்த செயலாளர், சிறந்த சங்கப்பணி, மற்றும் இருதய அறுவை சிகிச்சை முகாம் நடத்தியதற்காக விருது, கொரோனா தடுப்பு மருந்து வழங்கியதற்காக விருது, கண் தானம் விழிப்புணர்வு மற்றும் கண் பரிசோதனை முகாம் வைத்ததற்காக விருது, கார் மற்றும் பைக் பேரணி நடத்திய நடத்தியதற்காக விருது, சிறந்த இளைஞர் சேவை செய்தமைக்காக விருது, போன்ற இருபதுக்கும் மேற்பட்ட விருதுகளை வழக்கறிஞர் கரண்ட் கார்த்திக் தலைமையிலான இந்த வருடத்தின் திருவள்ளூர் ஸ்பார்ட்டன்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் பெற்றனர்.

இந்த நிகழ்வில் செயலாளர் சுனில் வசீகரன் உடன் இருந்தார் மேலும் இவ் விருதுகளை பெற்றது தனக்கு மகிழ்ச்சி என்றும் இனிமேல் நான் செய்யும் பொது சேவைகளுக்கு இந்த விருதுகள் ஒரு படிக்கட்டாக அமையுமென வழக்கறிஞர் கரண்ட் கார்த்திக் கூறினார் மேலும் சங்கம் ஆரம்பித்த இரண்டாவது வருடத்தில் இத்தனை விருதுகளை வாங்கி குவித்த அந்த சங்கத்துக்கு பலரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்

# மத்திய அரசு கொண்டு வந்த அக்னிபத் திட்டத்தை கைவிட கோரி சீர்காழியில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்




சீர்காழி, ஜூன் 28 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள அக்னிபத் திட்டத்தை இரத்து செய்ய கோரி காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி மாநில பொதுச் செயலாளர் கே பி எஸ் எம் கணிவண்ணன் தலைமை தாங்கினார். வட்டார தலைவர்கள் பாலகுரு, ராதாகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், ஞானசம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர தலைவர் லட்சுமணன் வரவேற்று பேசினார்.


ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட மகளிரணி தலைவர் சித்ரா செல்வி மாவட்ட துணைத் தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் மத்திய அரசு கொண்டுவந்த அக்னிபத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்களை வலியுறுத்தி பேசினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் சிவராமன், நாகூர் கனி, அறிவுடைநம்பி, சௌந்தரபாண்டியன், பிரியகுமார், சரவணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ மதுரையில் தனலட்சுமி பாரம்பரிய கலைகளுக்கான அறக்கட்டளையின் சார்பாக உலக சாதனை நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் யோகா, கராத்தே மற்றும் சிலம்பம் போன்றவற்றில் 30 மாணவ, மாணவிகள் தனித் திறன் உலக சாதனைகள் படைத்தனர். இந்த சாதனைகள் அனைத்தும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் பதியப்பட்டன. இந்நிகழ்வில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனர் நிமலன் நீலமேகம், பொதுச் செயலாளர் ஆர்த்திகா நிமலன், தலைமைச் செயற்குழுவின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார், மதுரை வர்ம சிகிச்சை மருத்துவர் ஆர்த்தி, யோகா ஆசிரியர் பாலாஜி, மதுரை தனலட்சுமி பாரம்பரிய கலைகளுக்கான அறக்கட்டளையின் நிறுவனர்கள் சுரேஷ் மற்றும் சதீஷ் உலக சாதனை படைத்த மாணவ, மாணவிகள் அவர்களுடைய பெற்றோர்கள், பயிற்சி ஆசான்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மயிலாடுதுறை மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கு தேவையான

# யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் கிடைக்காமல் தட்டுப்பாடு விவசாயிகள் பாதிப்பு



மயிலாடுதுறை, ஜூன்.28–

மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த ஆண்டு காவிரி நீர் முன்கூட்டியே வந்த காரணத்தாலும் , நிலத்தடி நீர்மட்டத்தை பயன்படுத்தியும் 67 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி பணிகள் நடைபெற்றுள்ளன.

மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் நடவு பணிகள் முடிந்து மூன்று வாரங்களுக்கு மேலாகியும் உரத் தட்டுப்பாடு காரணமாக, வயல்களில் பயிர்கள் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. குறுவை நடவு செய்யும் விவசாயிகள் 21 நாட்களுக்குள் முதல் அடி உரமும் அதன் பிறகு 15 நாள் இடைவெளியில் மேலுரமும் இடுவது வழக்கம். தற்பொழுது கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை கடைகளில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பயிர்களுக்கு வளர்ச்சியை கொடுக்கக்கூடிய நைட்ரஜன் சத்து நிரம்பிய யூரியா மற்றும் தூர் பிடிக்கும் பருவத்தில் கிடைக்கக்கூடிய மணிச்சத்தை வழங்கும் பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு மூட்டை பொட்டாஷ் உரம் ஆயிரத்து 700 ரூபாய் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்துள்ள நிலையில் ஒருசில தனியார் கடைகளில் மட்டும் ஆயிரத்து 900 ரூபாய் வரை பொட்டாஷ் உரம் விற்பனை செய்யப்படுகிறது. பொட்டாஷ் உரம் மற்றும் 500 ரூபாய்க்கு பயிர் ஊட்டச்சத்து ஆகிய இரண்டும் வாங்கினால் மட்டுமே 300 ரூபாய் பெறுமானமுள்ள யூரியா வழங்கப்படுகிறது.

ஒரு மூட்டை பொட்டாஷ் ஒரு மூட்டை யூரியா மட்டும் வழங்குவதால் விவசாயிகள் கூடுதல் செலவு ஏற்படுகிறது என்று வேதனை தெரிவித்துள்ளனர். தண்ணீரை முன்கூட்டியே திறந்த தமிழக அரசு உரம் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதன் காரணமாக பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்து விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் நிலை உருவாகி உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். இதை மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து உரம் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



▶ மதுரை மாவட்ட கலெக்டர் குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட கலெக்டர் அனீஷ்சேகர் நேற்று பெற்றுக் கொண்டார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 15ஆவது மாவட்ட மாநாடு அறந்தாங்கியில் நடைபெறுகிறது. அதை சிறப்பிக்கும் விதமாக ஆவுடையார் கோவில் பகுதியில் தியாகி சிலுவை முத்து நினைவு ஜோதியினை ஆவுடையார்கோவில் கானூர் முக்கத்தில் இருந்து அறந்தாங்கி நோக்கி கொண்டு வருவதற்காக செல்வமுத்து நினைவிடத்தில் கொடி ஏற்றப்பட்டது. கொடியினை ஆவுடையார்கோவில் துணைச் செயலாளர் ராமசுப்பிரமணியன் ஏற்றி வைத்தார். வைரமுத்து நினைவு ஜோதியை முன்னாள் மாவட்ட செயலாளர் செங்கோடன் ஏற்றிவைத்தார். அப்புகுட்டி நினைவு ஜோதியை விளானூரில்இருந்து எடுத்து உதடு வருவதற்காக அவருடைய நினைவிடத்தில் அவருக்கு மலர்வளையம் வைக்கப்பட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆவுடையார்கோவில் ஒன்றிய செயலாளர் விகே காமாட்சி கட்சி கொடியை ஏற்றி வைத்தார் அப்புகுட்டி நினைவு ஜோதியை ஜெபமாலை ஏற்றிவைக்க நினைவு ஜோதி அறந்தாங்கி நோக்கிப் புறப்பட்ட இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.







நியூயார்க்கில் நடைபெறும், வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவையின் (FeTNA) 35-வது விழா, பிற தமிழ்ச்சங்க கூட்டங்களில் கலந்துகொள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல இருப்பதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம்தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வாழ்த்து பெற்றார்

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



அரியலூர் ஜூன்.28-

அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட பெ.ரமண சரஸ்வதி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 302 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்பட்டு,இம்மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் ஆரம்ப கால பயிற்சி மையத்தில் 0 முதல் 6 வயது வரையுள்ள செவித்திறன் பாதிக்கப்பட்ட 20 இளஞ்சிறார்களுக்கு ரூ.55,600 மதிப்பில் காதொலிக் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறைத் திட்ட இயக்குநர் சு.சுந்தர்ராஜன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத்திட்ட அலுவலர் சிவக்குமார், மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்க புதிய நிர்வாகிகளுக்கு புதுக்கோட்டை நிர்வாகிகள் பாராட்டு



மதுரை ஜூன்.28-

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்க தேர்தல்-2022 மதுரையில் நடைபெற்றது. இதில் மாநில தலைவராக செந்தில், பொதுச்செயலாளராக ரவிசங்கர், டி.எம்.இ செயலாளராக ஸ்ரீதர், டி.எம்.எஸ் செயலாளராக ஜஸ்லின், டி.பி.எச் செயலாளராக சீனிவாசன், பொருளாளராக சுரேஷ்குமார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

புதிய நிர்வாகிகள் மாநில தலைவர் செந்தில் உள்ளிட்டவர்களுக்கு, புதுக்கோட்டை தலைவர் சலீம் அப்துல் குத்துஸ், டி.எம்.எஸ் செயலாளர் பெரியசாமி, டி.பி.எச் புதுக்கோட்டை செயலாளர் பொன் சரவணன், டி.பி.எச் அறந்தாங்கி செயலாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் முன்னாள் தலைவர் நவரத்தினசாமி ஆகியோர் பொன்னாடை அணிவித்துவாழ்த்துக்கள் தெரிவித்தார்கள்.

# உத்தரகாண்ட்டில் ஓடும் காரில் தாயும் 6 வயது மகளும் கூட்டு பாலியல் வன்கொடுமை

உத்தரகாண்ட் ஜூன்.28-

உத்தரகாண்டில் பெண் மற்றும் அவரது 6 வயது மகளை ஒரு கும்பல் காருக்குள் வைத்து பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

உத்தரகாண்ட் மாநிலம், ஹரித்துவார் மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண், தனது 6 வயது மகளுடன் வீட்டிற்கு நடந்து சென்றுக் கொண்டிருந்தார். அப்போது சோனு என்ற நபர் தனது காரில் லிப்ட் கொடுப்பதாக அந்த பெண்ணிடம் கூறியுள்ளார். இதை நம்பிய அந்த பெண் தனது மகளுடன் அந்த காரில் ஏறியுள்ளார். காரில் ஏற்கனவே சோனுவின் கூட்டாளிகள் இருந்துள்ளனர். அப்போது, ஓடும் காரில் அந்த பெண்ணையும் அவரின் 6 வயது மகளையும் காரில் இருந்தவர்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

பின்னர் ஓடும் காரில் இருந்துஅந்தபெண்ணையும், அவரது மகளையும் ஒரு ஏரியின் அருகே இறக்கி விட்டுள்ளனர். பின்னர் அந்தப் பெண் நள்ளிரவில் காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய கும்பலை தீவிரமாக தேடி வருகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்ணும், அவரின் மகளும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இதுகுறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பிரமேந்திர தோவல் கூறுகையில், "காரில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று அந்த பெண் சரியாக கூறவில்லை. காரை ஓட்டியவர் பெயர் சோனு என்று மட்டும் சொன்னார். இருவரையும் மருத்துவமனையில் அனுமதித்துள்ளோம். பாலியல் வன்கொடுமை நடந்துள்ளதாஎன்பதைஉறுதி செய்ய பரிசோதனைகள் நடத்தப்பட உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறோம்" என்றார்.

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 11-ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவிதம் தேர்ச்சி பெற்று சாதனை




புதுக்கோட்டை ஜூன்.28-

2021-2022-ஆம் கல்வியாண்டிற்கான 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியானது. இதில் புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 11-ம் வகுப்பு மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

பெரும்பாலான மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். பள்ளி அளவில் முதலிடம் பெற்றுள்ள 11-ம் வகுப்பு மாணவன் ஸ்ரீவிக்னேஷ்கர் 582/600, மாணவி ஸ்வேதா 579/600, மாணவி ஹேமபார்வதி 579/600, மாணவன் ஹரி பிரகாஷ் 577/600, மாணவன் ஆகாஷ் 576/600 மற்றும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மணிகளைப் பள்ளியின் தாளாளர் ரகுபதிசுப்ரமணியன், தலைவர் தேனாள் சுப்ரமணியன், பள்ளியின் நிர்வாக உறுப்பினர்கள் சுப்ரமணியன், சீனிவாசன், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினிநாச்சம்மை, முதல்வர் சிராஜுதீன், துணை முதல்வர் சுப்ரமணியன், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் வாழ்த்தினர்.

# உயர்கிறது சுங்க கட்டணம் தமிழக அரசு அறிவிப்பு !



சென்னை ஜூன் 28

தமிழ்நாட்டில் மொத்தம் 49 சுங்கச்சாவடிகள் உள்ளன. இதில் ஓஎம்ஆர் சாலை என்று அழைக்கப்படும் ராஜீவ் காந்தி தகவல் தொழில் நுட்ப விரைவு சாலையில் சுங்க கட்டணத்தை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி மூன்று சக்கர வாகனங்கள் ஒரு முறை பயணிக்க 11 ரூபாயும், ஒரு முறை சென்ற திரும்ப 22 ரூபாயும், ஒரு நாள் முழுவதும் பல முறை பயணிக்க 37 ரூபாயும், மாதம் முழுவதும் பயணம் செய்வதற்கான பயண அட்டை 345 ரூபாய் ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கார் மற்றும் ஜீப் வாகனங்கள் ஒரு முறை பயணிக்க 33 ரூபாயும், ஒரு முறை சென்று திரும்ப 66 ரூபாயும், ஒரு நாள் முழுவதும் பல முறை பயணிக்க 110 ரூபாயும், மாதம் முழுவதும் பயணம் செய்வதற்கான பயண அட்டை 2650 ரூபாய் ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இலகுரக வணிக வாகனங்கள் ஒரு முறை பயணிக்க 54 ரூபாயும், ஒரு முறை சென்ற திரும்ப 108 ரூபாயும், ஒரு நாள் முழுவதும் பல முறை பயணிக்க 150 ரூபாயும், மாதம் முழுவதும் பயணம் செய்வதற்கான பயண அட்டை 3365 ரூபாய் ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பேருந்துகள் ஒரு முறை பயணிக்க 86 ரூபாயும், ஒரு முறை சென்ற திரும்ப 170 ரூபாயும், ஒரு நாள் முழுவதும் பல முறை பயணிக்க 255 ரூபாயும், மாதம் முழுவதும் பயணம் செய்வதற்கான பயண அட்டை 5570 ரூபாய் ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் வாகனங்கள் மாதம் முழுவதும் பயணிக்க காருக்கு 350 ரூபாய், இலகு ரகு வாகனங்களுக்கு 400 ரூபாய், டிரக்குகள் மற்றும் பல அச்சு வாகனங்களுக்கு 1100 ரூபாய் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த சுங்க கட்டண உயர்வு ஜூலை 1ம் தேதி நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் பாரதிய ஜனதா கட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட தலைவர் செல்வம் அழகப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச்செயலாளர் பார்த்திபன், முரளிதரன், விஜயகுமார், அம்பாள், சுகன்யா, எஸ் கே மலர், மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக தேசிய பொதுக்குழு உறுப்பினர் புரட்சி கவிதாசன் கலந்து கொண்டு மத்திய பாரதிய ஜனதா அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினார். கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேற்கு ஒன்றிய தலைவர் பாஸ்கர் வரவேற்று பேசினார். முடிவில் பொதுச் செயலாளர் அரங்கு லெவன் நன்றி கூறினார்.

# செங்கல்பட்டு அருகே டிரைவர் வெட்டிக்கொலை




செங்கல்பட்டு ஜூன்.28-

செங்கல்பட்டு அருகே டிரைவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

செங்கல்பட்டை அடுத்த வல்லம் பஸ் நிலையம் அருகே ஆண் ஒருவர் கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் உயிருக்கு போராடி கொண்டிருப்பதாக அந்த பகுதி மக்கள் 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர். பின்னர் அவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து வழக்குப்பதிவு செய்து செங்கல்பட்டு தாலுகா போலீசார் கொலை செய்யப்பட்டவர் யார்? எந்த பகுதியை சேர்ந்தவர்? எதற்காக அவர் கொலை செய்யப்பட்டார்? என்பது குறித்து விசாரித்து வந்தனர்.

விசாரணையில் கொலைசெய்யப்பட்டவர் சோழிங்கநல்லூரை அடுத்த ஒட்டியம்பாக்கம் பகுதியை சேர்ந்த பூங்காவனம் என்பவரது மகன் அர்ஜுன் (30) என்பது தெரியவந்தது. இவர் தனியார் கால் டாக்ஸி நிறுவனத்தில் டிரைவராக பணிபுரிந்து வருவதும், சவாரிக்காக அழைத்து வந்த மர்ம நபர்கள் அர்ஜுனை கொலை செய்து விட்டு காரை திருடி சென்றதும் தெரியவந்தது. கொலையாளிகளை தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர்.

# திருவாலி, பெருந்தோட்டம் ஏரிகளின் நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆணை வழங்கிய ஆர்டிஓ



சீர்காழி ஜூன் 28

சீர்காழி , தரங்கம்பாடி தாலுகாவில் உள்ள மிகப்பெரிய நீர் ஆதாரமாக விளங்கக்கூடிய ஏரிகளின் நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலில் 20 தலைவர்கள் உட்பட 114 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகாவில் மிகப்பெரிய நீர் ஆதாரமாக விளங்கக்கூடிய திருவாலி, பெருந்தோட்டம் ஏரிகளின் மூலமாக காரைமேடு, புதுத்துறை, திருவாலி, கீழ சட்டநாதபுரம், திருநகரி, தென்னம் பட்டினம், அதேபோல் பெருந்தோட்டம் ஏரி வாயிலாக பெருந்தோட்டம், அகர பெருந்தோட்டம், மங்கைமடம், திருவெண்காடு ,போன்ற பல்வேறு கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விலை நிலங்கள் பாசன வசதிகள் பெற்று வருகின்றன. இதைப்பல் தரங்கம்பாடி தாலுகாவில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை விளை நிலங்களுக்கான நீர் ஆதாரங்களிலிருந்து நீரினை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்,

இந்நிலையில் மயிலாடுதுறை காவிரி வடிநில கோட்ட நீர்வளத் துறை சார்பில் திருவாலி, பெருந்தோட்டம் ஆகிய 2 ஏரிகளில் இருந்து நீரினை பயன்படுத்துவோர், அதைப்போல் தரங்கம்பாடி தாலுகாவில் நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கடந்த 14 முதல் 16 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் பெறப்பட்டன .

இதில் வாக்களிக்க உரிமை பெற்றுள்ள ஆயக்கட்டுதாரர்கள், திருவாலி ஏரிக்கு ஒரு தலைவர், 8 ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள், அதேபோல் பெருந்தோட்டம் ஏரிக்கு ஒரு தலைவர், 4 ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் தரங்கம்பாடி தாலுகாவில் மஞ்சளாறு பிரிவு சாத்தனூர் மற்றும் மருதபள்ளம் மாமாகுடி, பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாய்க்கால், வீரசோழன் ஆறு, கொத்தங்குடி வாய்க்கால் 18 தலைவர்கள், 82 ஆட்சிமன்ற குழு உறுப்பினர்களுக்கான கூர்ந்தாய்வு கடந்த 17ஆம் தேதி நடைபெற்றது அதனைத்தடர்ந்து நேற்று சீர்காழி ஆர்டிஓ அர்ச்சனா, தலைமையில் ஆர்டிஓ அலுவலகத்தில் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்திற்கு 20 தலைவர்கள் உட்பட 114 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

சீர்காழி தாசில்தார் செந்தில்குமார், தரங்கம்பாடி தாசில்தார் புனிதா, ஆர்டிஓ நேர்முக உதவியாளர் சண்முகம் , தேர்தல் துணை தாசில்தார்கள் விஜயராணி, ரஜினி, மற்றும் குணசெல்வி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வெங்கடேசன், ஆகியோர் கலந்து கொண்டனர். படவிளக்கம் சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தேர்தலுக்கான அறையை ஆர்டிஓ அர்ச்சனா ஆய்வு செய்தார் .அருகில் தாசில்தார் செந்தில்குமார், நேர்முக உதவியாளர் சண்முகம், ஆணையர் இளங்கோவன் மற்றும் பலர்

# கோவில்பட்டி அருகே கார் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற காவலரும் மகனும் பலி



தூத்துக்குடி ஜூன்.28-

கோவில்பட்டி அருகே கார் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற போலீஸ்காரரர் தனது மகனுடன் பலியானார். அவருடைய மனைவி, இன்னொரு மகன் படுகாயம் அடைந்தனர்.


தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வெங்கடேஸ்வர புரம் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன் மகன் ராஜா மார்சல் (38). இவர் காடல்குடி போலீஸ் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வந்தார். இவருடைய மனைவி தேவிகா (30), மகன்கள் ரஷ்வந்த் (6), ரிஷாந்த் (4), மகள் ரென்னிஷா (2). தேவிகா கோவில்பட்டி அடுத்துள்ள தெற்கு திட்டங்குளம் கிராமத்தை சேர்ந்தவர். இவருடைய தாத்தா இறந்த துக்க நிகழ்ச்சிக்கு துணி எடுப்பதற்காக ராஜா மார்சல் தனது மோட்டார் சைக்கிளில் மனைவி குழந்தைகளுடன் கோவில்பட்டிக்கு வந்தார்.

அங்குள்ள ஒரு ஜவுளி கடையில் புது ஜவுளி எடுத்துக்கொண்டு மீண்டும் குடும்பத்தினருடன் மோட்டார் சைக்கிளில் தெற்கு திட்டங்குளம் நோக்கி சென்று கொண்டிருந்தார். கோவில்பட்டி அருகே எட்டயபுரம் ரோட்டில் உள்ள தொழிற்பேட்டையை கடந்து செல்லும் போது, எதிரே எட்டயபுரத்தில் இருந்து கோவில்பட்டி நோக்கி வேகமாக வந்த கார் திடீரென மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு ராஜா மார்சல் உள்பட 4 பேர் பலத்த காயமடைந்தனர். சிறுமி ரென்னிஷா காயமின்றி தப்பினாள். அங்கிருந்தவர்கள் அந்த 4 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக கோவில்பட்டி மாவட்ட அரசு மருத்துவமனையில் சேர்ந்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி ரிஷாந்த் உயிரிழந்தான். உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ராஜா மார்சலை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் அவரும் பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும் படுகாயமடைந்த தேவிகா, இன்னொரு மகனான ரஷ்வந்துடன் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கொடுத்த புகாரின் பேரில் கோவில்பட்டி கிழக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் சுஜித் ஆனந்த் வழக்குப்பதிவு செய்து, விளாத்திகுளம் பூமாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த கார் டிரைவர் சிவராமச்சந்திரனை (24) கைது செய்தார். விபத்தில் போலீஸ்காரரர் தனது மகனுடன் பலியான சம்பவம் தெற்கு திட்டங்குளம் கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அதிமுகவின் துரோகியை கண்டுபிடித்தாராம் ஜெயக்குமார்

# பேரறிவாளன் மனவருத்தத்துடன் இருக்கின்றார் முதல்வருக்கு அற்புதம்மாள் கோரிக்கை






# மகராஷ்டிரா அரசியலில் திருப்பம் அதிருப்தி எம்எல்ஏக்களுக்கு அவகாசம்

சென்னை / புதுக்கோட்டை | 28.06.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

28.06.2022 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பி. வி. நரசிம்ம ராவ் , இந்தியாவின் 9வது பிரதமர் (பி.1921) (இ.2004)



சாண்டோ சின்னப்பா தேவர் , தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1915) (இ.1978)



கர்பால் சிங் , மலேசிய அரசியல்வாதி (பி.1940) (இ.2014)



மாரியப்பன் தங்கவேலு , தமிழக-இந்திய மாற்றுத்திறனாளர், தடகள விளையாட்டு வீரர் (பி.1995)



## இன்றைய நினைவு நாள்

ஹச். பி. அரி கௌடர் , சென்னை மாகாண சட்டமன்றத் தலைவர் (பி.1893) (இ.1971)



பிரசந்தா சந்திரா மகாலனோபிசு , இந்திய அறிவியலாளர் (பி.1893) (இ.1972)



அ. க. லோகிததாசு , இந்திய இயக்குநர் (பி.1955) (இ.2009)

